DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.12 /2025

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Father's/Husband's Name : | ராமன் |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்.124/15, விஸ்தீரணம் 4 ஏக்கர் 55 செண்ட். தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் வாதியின் தந்தை கோவிந்தசாமி பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டாவ ழுங்கப்பட்டதாகவும், ஆனால் கோவிந்தசாமி என்ற பெயர் தவறுதலாக பதவிவாகியுள்ளளது என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்திற்கான பட்டா 1981ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டா ஆனது கோவிந்தசாமி பெயரில் தான் வழங்கப்பட்டது என்றாலும் நாங்கள் தான் எனது தந்தை புகைப்படத்தை அதில் ஒட்டி மோசடி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது சம்மந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளோம். தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களது அனுபவத்தில் எத்தனை ஆண்டுகளாக இருக்கிறது என்றால், எனது தாத்தா காலத்தில் இருந்து 80 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. தாவா சொத்தில் எனது தாத்தா அனுபவத்தை காட்ட ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா ? என்றால் இல்லை. 2) சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வாதியின் தகப்பனார் தாவா சொத்தில் அனுபவம் செய்து வந்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு தற்போது வாதியின் அனுபவத்தில் இருந்து

வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதியின்



தகப்பனார் எனது அத்தையின் மச்சான் ஆவார். தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களோ மோசடியாக மாற்றி வைத்துக்கொண்டு வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1974ம் ஆண்டியிலிருந்து கோவிந்தசாமி பெயரில் தான் அடங்கல் தாக்கலாகி இருக்கிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 1384ம் பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கு கோவிந்தசாமி நாயுடு பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். அந்த அடங்கல் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 1394ம் பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.12 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 1408ம் பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.13 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 1429ம் பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.14 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. ஆதியிலேயே மேற்படி ஆவணங்களில் மோசடியாக பெயர் மாற்றம் செய்துள்ளார். தாவா சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லாததால் வாதி கோரியுள்ளப்படி வழக்கு தீர்பாக வேண்டும் என்றால் சரியானது அல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 24.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.06.24 17:11:09 +0530

District Munsif,
Aundipatti.